உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்~07 | விசுவாசுவ வருடம் மாசித் திங்கள் மாசி ~2026 | பூமி~02



# தமிழ் தலைவர்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்

எம் மண்ணில் பல வருடங்களாக நடைபெற்ற யுத்தம் எத்தனையோ இழப்புக்களையும் எத்தனையோ துன்பங்களையும் தந்து விட்டது. எங்களுக்காக எத்தனையோ பேர் தங்களுடைய உயிர்களை தியாகம் செய்து இருக்கிறார்கள். ஆனால் இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்குள்ளே தாங்கள் பகையை வளர்த்துக்கொண்டு வீணாக காலத்தை செலவு செய்துகொண்டு இருக்கிறார்கள். இது ஒரு விபரீதமானது. வேதனையானது. இவ்வளவு பேருடைய இழப்புக்கு பின்னாலும் எங்களிடம் ஒரு உண்மையான தேசப்பற்றும் உண்மையான ஒற்றுமையும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளுகின்ற தன்மையும் வளரவில்லை என்று நினைக்கின்ற போது இது நாம் செய்த தவக்குறைவாக கருத வேண்டி உள்ளது. எனவே இந்த நிலையிலே அரசியல் வாதிகள் சுயநல போக்குகளை தவிர்த்து பொதுநல போக்கோடு செயல்பட வேண்டும்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தி ஆகிவிட்டது. ஒரு பேச்சு வார்த்தைக்கு தமிழ் தலைவர்கள் இதுவரை ஒன்றாக ஒரு வேண்டுதல் விடுக்கவில்லை என்பது ஒரு கவலைக்குரிய விடயம். தமிழ் தலைவர்கள் இந்த புதிய அரசாங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்து தமிழர்களுடைய பிரச்சனையை தீர்ப்பதற்கு நீதியான சுயாட்சி முறையிலான ஒரு பரந்த தன்னைத்தானே நிர்வகிக்கக்கூடிய சுதந்திரமான ஆட்சி உரிமை பெறுவதற்கு ஒரு உரையாடலை செய்யலாம். இன்றைய அரசாங்கம் எந்த நிலையிலே இருக்கின்றது என்பதை பேச்சுவார்த்தைக்கு பின்னாலே தெளிவுபடுத்தலாம். ஒன்றுமே இல்லாமல் நாம் எல்லோரும் சந்தேக கண்ணோடு அல்லது எல்லோரோடும் கோபித்து இன்றைக்கு பயனில்லை. எங்களுக்காக உதவுவதற்கு இந்த நாடு முழுமையாக தீர்வு தருவதற்கு தயாராக இல்லை. நாங்கள் நோர்வே பேச்சு வார்த்தை, திம்பு பேச்சு வார்த்தை, ஜப்பானில் நடந்த பேச்சுவார்த்தை எல்லாவற்றிலும் தோல்வி கண்டவர்கள். இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் இன்று இழந்து போய் நிற்கின்றோம். வடக்கு கிழக்கு இணைத்து வழங்கப்பட்ட மாகாண சபையை நாம் சீராக நடத்தாமல் இன்று தோற்றுப் போய் இருக்கின்றோம் மாகாணசபை காலம் முடிந்து இன்று எத்தனை வருடங்கள். தேர்தல் நடைபெறவில்லை. எல்லாரும் ஒருமித்து மாகாணசபை தேர்தலை நடத்துங்கள்

என்று வேண்டுதல் கொடுக்காமல் நாம் தனித்து போய் நின்று உரிமைக்காக குரல் கொடுப்பதாக சொல்லுவதில் எந்த பயனும் இல்லை.

எங்கள் சமுதாயத்திலே இன்றைக்கு இருக்கின்ற பிரச்சனை எங்களுடைய இனத்தினுடைய மக்கள் தொகை மிகக் குறைந்து கொண்டு போகுகின்றது. போராட்டம் தொடங்க முதல் இருந்த சனத்தொகையில் அரைவாசிக்கு மேலே குறைந்துள்ளது. இப்பொழுது பிறப்பு வீதமும் குறைந்து கொண்டு போகிறது. எங்கள் நிலகுலங்களை தென்பகுதியைச் சார்ந்தவர்கள் வந்து பிடிக்கின்ற தன்மை வளர்ந்து கொண்டு வருகிறது. அது மதத்தின் பெயரால் அல்லது திட்டமிட்ட குடியேற்றத்தின் பெயரால் நடக்கிறது. நாம் எம் அடையாளங்களை இழந்து கொண்டிருக்கிறோம். இந்த வேளையில் செயற்கிரிய காரியங்கள் செய்வதற்கு எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்கின்ற பெருந்தன்மை எங்களிடம் இல்லை. ஆளுக்கு ஒரு கட்சி, ஆளுக்கொரு கூட்டு, ஆளுக்கு ஒரு அறிவிப்பு, ஆளுக்கு ஒரு போராட்டம், ஆளுக்கு ஒரு நிலை என்ற மாதிரி ஒரு கட்சிக்குள்ளேயே பல கட்சிகளாக குரல் கொடுக்கின்ற தன்மை எங்களுக்கு இருக்கின்ற மிகப்பெரிய அநாகரிகம் என்று தான் கூற வேண்டும்.

எனவே கடைசி விளிம்பில் நாம் நிற்கின்றோம். இந்த வேளையாவது ஒன்று பட்டு எங்களது உரிமையை சத்திய வழியில் நின்று இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை செய்ய வேண்டும். இந்திய பிரதமரிடம் சகல தமிழ் கட்சிகளும் ஒருங்கிணைந்து எங்கள் விடயத்தில் தலையிடுங்கள் என்று கேட்க வேண்டும். இவற்றை விட்டு நாம் அறிக்கைகளை விடுவதனால் எந்த அர்த்தமும் இல்லை. பொதுமக்கள் தமிழ் தலைவர்களிடமிருந்து ஒதுங்கிக் கொண்டு போவதற்கும் இதுதான் காரணம் என்பதை அவர்கள் எப்போது விளங்குகிறார்களோ அப்போது தான் விடியல் ஆரம்பிக்கும்.

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

கலாநிதி செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்

# வவுனியா பல்கலைக்கழகத்தில் கோலாகலமாக நடைபெற்ற 7ஆவது சர்வதேச திருக்குறள் மாநாடு




மொறிசியஸ் சர்வதேச திருக்குறள் மன்றம், வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச தமிழ்ப் பண்பாட்டு மையயம் ஆகியவற்றின் கூட்டு ஏற்பாட்டில், "மனித மாண்பு" எனும் உயரிய தொனிப்பொருளிலான 7ஆவது சர்வதேச திருக்குறள் மாநாடு கடந்த 01.02.2026 மற்றும் 02.02.2026 ஆகிய இரு தினங்கள் வவுனியா பல்கலைக்கழகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

உலகப்பொதுமறையாம் திருக்குறளின் விழுமியங்களை உலகெங்கும் கொண்டு செல்லும் நோக்குடன் நடைபெற்ற இந்த மாநாட்டில், தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.
மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வில் இந்திய துணைத்தூதுவர் சாய்முரளி அவர்கள் மற்றும் வடமாகாண ஆளுநர் வேதநாயகன் அவர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இதன்போது திருக்குறள் மனித குலத்திற்கு எவ்விதம் வழிகாட்டுகிறது என்பது குறித்தும், சமூக மாற்றத்தில் குறள் நெறியின் பங்கு குறித்தும் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இரண்டாம் நாள் நிகழ்வில் வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அற்புதராஜா மற்றும் புகழ்பெற்ற பேச்சாளர் தமிழருவி சிவகுமாரன் உட்படப் பல ஆளுமைகள் கலந்துகொண்டு சிறப்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.






இந்த மாநாட்டில் தமிழுக்கும் திருக்குறளுக்கும் அரும்பணி ஆற்றிவரும் மூத்த அறிஞர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், யாழ். பல்கலைக்கழக மேனாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள் மாநாட்டில் ஆற்றிய காத்திரமான சிறப்புரையைத் தொடர்ந்து, பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அதேபோல், ஈழத்துத் திருத்தலமான மாவிட்டபுரத்தில் திருக்குறளுக்கு எனத் தனி வளாகம் அமைத்து, குறள் நெறியைப் பரப்பி வரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் செஞ்சொற்செல்வருமான கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அவரது அரிய பணிகளுக்காகப் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிப் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

தமிழ் மொழியின் செழுமையையும், வள்ளுவன் தந்த வாழ்வியல் நெறிகளையும் இளைய தலைமுறைக்குக் கொண்டு செல்லும் ஒரு பாலமாக அமைந்த இம்மாநாடு, மனித மாண்பினைப் போற்றும் ஒரு உன்னத நிகழ்வாக அமைந்தது. திருக்குறளின் மேன்மையை உலகறியச் செய்யும் இத்தகைய முயற்சிகள், தமிழ்ப் பண்பாட்டுப் பாதுகாப்பிற்குப் பெரும் வலுச் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.





# மகாலட்சுமி வாசம் செய்யும் வீடு



பெரும் பணக்காரரான ஒரு வியாபாரியின் வீட்டில். செல்வத்திற்கு பஞ்சமில்லை. எல்லா செல்வமும் அவர் வீட்டில் கொட்டி கிடந்தது. ஒருநாள் அந்த வியாபாரியின் கனவில் தோன்றிய மகாலட்சுமி, பக்தனே! நீயும் உன் முன்னோர்களும் செய்துள்ள புண்ணியங்களின் காரணமாகவே இது வரை நான் உன் வீட்டிலேயே தங்கியிருந்தேன். நீ செய்த புண்ணியம் அனைத்தும் தற்போது தீர்ந்து விட்டது. எனவே இன்னும் ஓரிரு நாளில் உன் வீட்டை விட்டு வெளியேற உள்ளேன்.

அதற்கு முன் உனக்கு ஏதாவது வரம் வேண்டும் என்றால் கேட்டுப் பெற்றுக்கொள். ஆனால் என்னை இங்கேயே தங்கியிருக்கக் கேட்கக் கூடாது என்றாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. வியாபாரி வீட்டில் உள்ள அனைவரையும் அழைத்து கனவில் நடந்தவற்றைக் கூறினார். மகாலட்சுமியிடம் என்ன வரம் கேட்கலாம் என்று அவர் தம் குடும்பத்தினரிடம் ஆலோசனை கேட்டார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக ஆலோசனை கூறினர்.

ஆனால் அவர்கள் அனைவரும் ஒரே கருத்தையே வெளிப்படுத்தினர். நவ ரத்தினங்களை வரமாக கேளுங்கள் ஏராளமான பொற்குவியல்களை கேளுங்கள் நிறைய உணவு பொருட்களை கேளுங்கள் மாட மாளிகைகள் பலவற்றை கேளுங்கள் என்று அடுக்கிக் கொண்டே போனார்கள்.

அப்போது அந்த வீட்டின் கடைசி பெண் தன் தந்தையிடம், அப்பா நமக்கு தேவையான பொன், வைரம், வைடூரியம், மாணிக்கம், வீடு என எவற்றை வரமாக கேட்டு வாங்கினாலும், அது நம் வீட்டில் நிலைக்கப் போவதில்லை. ஏனெனில் எப்போது நம் வீட்டில் இருந்து மகாலட்சுமி தேவி வெளியேறப் போகிறேன் என்று எப்போது கூறி விட்டாளோ, அவள் வெளியேறியவுடன் அவளது ஐஸ்வரியம் பொருந்திய இந்த பொருட்களும் வெளியேறி விடும், அல்லது நிலைக்காமல் போய்விடும்.
எனவே எப்போதும் எங்கள் வீட்டில் பரஸ்பரம் அன்பு நிலைத்திருக்கும்படி வரம் அருளுங்கள் என்று மகாலட்சுமி தேவியை கேளுங்கள்என்று கூறினாள்.

இளைய மகள் கூறியதே சரி என்று வியாபாரிக்கு தோன்றியது. அதையே இறுதி முடிவாகக் கொண்டு, இரவு தூங்கச் சென்றார் வியாபாரி.

அன்றைய தினம் இரவில், அவர் கனவில் மகாலட்சுமி தோன்றினாள்.

அவளிடம், அன்னையே! எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களிடம் எப்போதும் பரஸ்பரம் அன்பு நிலைத்திருக்க வேண்டும். இதுவே நான் உன்னிடம் கேட்கும் வரம். இந்த வரத்தை மட்டும் தாங்கள் அருளினால் போதுமானது என்று வியாபாரி கேட்டார்.

லட்சுமிதேவி சிரித்தபடி மகனே! இப்படி ஒரு வரத்தைக் கேட்டு மீண்டும் உன் வீட்டிலேயே என்னை கட்டிப்போட்டு விட்டாய். எந்த குடும்பத்தில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பு செலுத்தி வாழ்கிறார்களோ, எந்த குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் இல்லையோ, அந்த வீட்டில் நிச்சயமாக நான் இருந்தே தீருவது என்று முடிவு எடுத்துள்ளேன். எனவே நீ கேட்ட இந்த வரத்தால் மீண்டும் நான் உன் வீட்டிலேயே தங்கி இருந்து விடுகிறேன் என்று கூறி அங்கேயே தங்கிவிட்டாள்.

எந்த வீட்டில் குடும்பத்து பெரியவர்களை, மதித்து வழிபடுகிறார்களோ, எங்கு நாகரீகமான முறையில் மற்றவர்களுடன் மரியாதையோடு பழகுகிறார்களோ, பிறருடைய செய்கையால் மனதில் கோபம் ஏற்பட்டாலும் எவர் தங்கள் வாயால் சண்டை செய்யாமல் இருக்கிறார்களோ அந்த இடங்களில் எல்லாம் நான் வசிக்கிறேன் என்று இந்திரனிடம் ஒருமுறை லட்சுமி கூறியதாக புராண வரலாறு தெரிவிக்கிறது.

# ஆன்மீகப்பெருக்குடன் நடைபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம்




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாற்றுப் பெருமைமிக்க அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் அருள்மிகு ஸ்ரீ சிவஞான வைரவ சுவாமி திருக்கோயிலின் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா, 2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ஆம் திகதி பக்திபூர்வமாகவும் மிக விமர்சையாகவும் நடைபெற்றது. கல்விப்புலமும் ஆன்மீகமும் கைகோர்க்கும் ஒரு புனிதமான நிகழ்வாக அமைந்த இத்திருவிழா, பாடசாலைச் சமூகத்தின் ஒருமைப்பாட்டையும் இறைபக்தியையும் உலகிற்கு பறைசாற்றியது. பல சிவாச்சாரியார்கள் மந்திரங்கள் முழங்க, வேத பாராயணங்களுடன் கிரியைகளை முன்னின்று நடத்த, தெய்வீக ஆற்றல் நிறைந்த ஒரு சூழலில் வைரவப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிட்டியது.

இந்த மஹா கும்பாபிஷேக நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தற்போதைய மாணவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் கலந்து கொண்டனர். அவர்களுக்கு நிகராக, உலகின் பல பாகங்களில் இருந்தும் வருகை தந்த

பழைய மாணவர்கள் தங்களது தாய் நிறுவனத்தின் ஆன்மீக எழுச்சியில் பங்கெடுத்துக்கொண்டமை நெகிழ்ச்சியான காட்சியாக அமைந்தது. வைரவப் பெருமானின் மெய்யடியார்கள் திரளாகத் திரண்டு வந்து, "அரோகரா" கோஷங்களுடன் ஆலய முன்றலில் பக்திப் பெருக்கோடு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.






பாடசாலைத் தளத்தில் அமைந்துள்ள இத்திருக்கோயில் மாணவர்களின் ஒழுக்கத்திற்கும், மன வலிமைக்கும் ஆதாரமாக விளங்குவதோடு, இந்த கும்பாபிஷேக நிகழ்வு அத்தொடர்பினை மேலும் வலுப்படுத்தியுள்ளது. பல தசாப்த கால பாரம்பரியத்தைக் கொண்ட இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம், புதிய பொலிவுடன் மென்மேலும் சிறப்படைய வழிவகுத்துள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் என முத்தலைமுறையினரும் இணைந்து ஒருமித்த கருத்துடன் ஆற்றிய தொண்டுகள், வைரவப் பெருமானின் பேரருளால் இனிதே நிறைவடைந்தன. ஆன்மீக அதிர்வுகளும், பக்தி மணமும் நிறைந்த இந்நாள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாற்றில் ஒரு பொற்காலப் பதிவாக என்றும் நிலைத்திருக்கும்.






# இலங்கையில் திருமுறை வகுப்புத் தொடக்க விழாவை தருமபுர ஆதீன குரு மகா சந்நிதானம் தொடக்கி வைத்தார்



இலங்கைச் சிறுவர்களிடையே திருமுறை அறிவை வளர்க்கும் நோக்கில், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் தருமபுர ஆதீன திருமுறை ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து நடத்தும் மாபெரும் திருமுறை வகுப்புத் தொடக்க விழா 06.02.2025 (வெள்ளிக்கிழமை) கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு அருளாசி வழங்குவதற்காகக் கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்தின் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வருகை தந்திருந்தார். அவருக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் நிறுவனருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் மாலை அணிவித்துச் சிறப்பான வரவேற்பு அளித்தார்.

இலங்கையின் 18 மாவட்டங்களில், 141 மையங்களின் ஊடாக ஆயிரக்கணக்கான மாணவர்களை உள்வாங்கி இந்தத் திருமுறை வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. தருமபுர ஆதீன திருமுறை ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், திருமதி கௌரி அம்மையார் இந்தப் பாரிய திட்டத்தின் பொறுப்பாளராகச் செயல்பட்டு, மிகக்குறுகிய காலத்தில் இச்சாதனையைச் சாத்தியப்படுத்தியுள்ளார்.





அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திருமதி அபிராமி கைலாசம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. அநிருத்ரன் மற்றும் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமுறை ஓதுவதன் அவசியம், தருமபுர ஆதீனத்தின் தொலைநோக்கான சிந்தனைகள், மற்றும் இளைய தலைமுறைக்குச் சைவ சமய விழுமியங்களைக் கொண்டு சேர்ப்பதன் முக்கியத்துவம் குறித்து அவர்கள் உரையாற்றினர்.

இலங்கை முழுவதிலும் உள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஒரே நேரத்தில் இந்த அறநெறிப் பயணத்தில் இணைந்திருப்பது, ஈழத்துச் சைவ வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை தருமபுர ஆதீனத்தை சார்ந்தவர்களும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரும் இணைந்து மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.





# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 292ஆவது ஆண்டு நெற்புதிர் அறுவடை விழா பக்திப்பூர்வமாக நடைபெற்றது



யாழ்ப்பாணம், நல்லூர் மண்ணின் வரலாற்றுச் சிறப்புமிக்க மரபுகளில் ஒன்றான நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் நெற்புதிர் அறுவடை நிகழ்வு, 31.01.2025 காலை பழைமை மாறாத பண்பாட்டு விழுமியங்களுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பேணப்பட்டு வரும் இந்தத் தொன்மையான பாரம்பரியம், இவ்வருடம் தனது 292ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்கின்றமை ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

தைப்பூசத் திருநாளுக்கு முதல் நாளை புதிர் தினம் எனக் கொண்டாடுவது நல்லூர் ஆலயத்தின் நீண்டகால மரபாகும். அந்த வகையில், அன்றைய தினம் அதிகாலை வேளையில் ஆலயத்தின் அறங்காவலரும், சிவாச்சாரியார்களும் இணைந்து முதலாவது நெற்கதிரை அறுவடை செய்வதற்காகப் புறப்பட்டனர். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான, செம்மணி பகுதியில் அமைந்துள்ள வயல் நிலத்தில் இதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.
செம்மணி வயல் நிலத்தைச் சென்றடைந்ததும், அங்குள்ள நிலத்திற்கு விசேட பூசை வழிபாடுகள் மற்றும் கிரியைகள் முறைப்படி நடத்தப்பட்டன. நிலத்திற்கு நன்றி செலுத்தும் விதமாக இடம்பெற்ற இந்தப் பூசைகளைத் தொடர்ந்து, மங்கல வாத்தியங்கள் முழங்க ஆலய அறங்காவலர் மற்றும் சிவாச்சாரியார்கள் இணைந்து முதலாவது நெற்புதிரை மங்கலமாக அறுவடை செய்தனர்.




அறுவடை செய்யப்பட்ட அந்தப் புதிய நெல், புனிதமாகக் கொண்டு வரப்பட்டு அதிலிருந்து அமுது (புதிர்ச் சோறு) தயாரிக்கப்பட்டது. இவ்வாறு முறைப்படி சமைக்கப்பட்ட அமுது, நல்லூர் கந்தசுவாமிக்கு விசேட படையலாக வைக்கப்பட்டு, சிறப்புப் பூசைகள் மற்றும் ஆராதனைகள் இடம்பெற்றன. இறைவனுக்குப் படைக்கப்பட்ட பின்னர், இப்பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் விவசாயப் பண்பாட்டையும், ஆன்மீகத்தையும் ஒருசேரப் பிரதிபலிக்கும் இந்த விழா, 292 ஆண்டுகளாகத் தொய்வின்றித் தொடர்ந்து வருவது அதன் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. நிலத்தோடு இணைந்த வாழ்வியலையும், உழைப்பின் பலனை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் நன்றியுணர்வையும் பறைசாற்றும் இந்த நெற்புதிர் விழா, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தனித்துவமான கலாசார அடையாளமாக இன்றும் போற்றிக் காக்கப்பட்டு வருகின்றது






# சிவம் கலந்த சிலந்தி



புறாவின் பொருட்டுத் துலை புகுந்து தியாகம் புரிந்த சிபியின் வழிவந்த சோழர்களுக்கு உரிமையாகிய சோழவள நாட்டிலே, காவிரி நதிக்கரையிலே சந்திர தீர்த்தத்தின் அருகில் ஒரு சோலை உண்டு. அப்பூங்காவில் வெண்ணாவல் மரத்தின் கீழ் விளங்கும் சிவலிங்கத்தை ஒரு வெள்ளானை தவ உணர்வுடன் தும்பிக்கையில் தண்ணீர் முகந்து ஆட்டிப் பூங்கொத்துக்களை எடுத்துச் சாத்தி வணங்கி வழிபாடு செய்யும், அதனால் அது திருஆனைக்கா என்று பெயர் பெற்றது.

அங்கு அறிவுடைய ஒரு சிலந்தி மரத்தின் சருகு இறைவன் மீது உதிரா வண்ணம் அன்புடன் தன் வாய்நூலால் பந்தரிட்டது. இறைவன் மீது இவ்வாறு வாய்நூலால் பந்தரிடுவது அசுசிதம் என்று கருதிய யானை அதனை அழித்துவிட்டு வழக்கம்போல் பூசித்துவிட்டுச் சென்றது. சிலந்தி மிகவும் அன்புடன் மீண்டும் பந்தரிட்டது. மறுநாள் மறுபடியும் யானை அழித்தது.

இவ்வண்ணம் பலமுறை நிகழ்ந்தது. இது கண்ட சிலந்தி சினமுற்றது. இறைவனுடைய திருப்பந்தரை அழித்துச் சிவப்பணிக்கு இடர்புரியும் இந்த யானையைக் கொல்ல வேண்டும் என்று கருதியது. நூலால் பந்தரிட்டு அதில் ஒருபுறம் மறைந்திருந்தது. பூசிக்க வந்த யானை அதை அழிக்கும்போது சிலந்தி யானையின் தும்பிக்கைக்குள் நுழைந்து கடித்தது. அதன் வி'வேகத்தாலும் கடியினால் ஏற்பட்ட வேதனையினாலும் துன்புற்ற யானை மண்மிசை வீழ்ந்து புரண்டது. தும்பிக்கையைப் பலமுறை பூமியில் மோதியது. அதனால் தும்பிக்கையுள் சிக்கிய சிலந்தி மாண்டது. சிலந்தி வி'த்தால் யானையும் மாண்டது.

இறைவன் அருட்காட்சி தந்து யானைக்கும் சிலந்திக்கும் திருவருள் புரிந்தார். யானை சிவபதம் உற்றது. இறைவனுக்குப் பந்தரிடும் பணியில் அதிவிருப்பமுடைய சிலந்தி சோழர் குலத்தில் மன்னனாகப் பிறந்து மேலும் கோயிற் பணி புரியுமாறு இறைவன் திருவருள் புரிந்தனர்.

திருக்கையிலையில் சில கணத்தவருள் மாலியவான், புட்பதந்தன் என்ற இருவர் தமக்குள் சிவத்தொண்டில் தாம்தாமே சிறந்தவர் என்று கருதி மாறுபட்டனர். ஒருவரையொருவர் அது காரணமாகச் சினந்து மாலியவான் புட்பதந்தனை யானையாகுமாறு சபித்தான். புட்பதந்தன் மாலியவானைச் சிலந்தியாகுமாறு சபித்தான். இருவரும் இறைவன் ஆணையின்படி இத்திருத்தலத்திலே யானையும் சிலந்தியுமாகப் பிறந்து சிவபிரானுடைய திருத்தொண்டிலேயே ஈடுபட்டுப் பழம்பிறப்பின் பகை காரணமாக இப்பிறப்பிலும் மாறுபட்டுப் பகைத்து மாண்டு, முடிவில் வீடு பேறு பெற்றனர். முதலில் யானையைக் கொல்லச் சிலந்தியே முயன்றதனால், அதற்கு மீண்டும் ஒரு பிறப்பு வந்தது. அப்பிறப்பும் மேலானதாக எய்தியது.

வாய்நூலால் பந்தரிட்ட புண்ணியத்திற்கு மன்னனாகப் பிறந்து உலகம் முழுவதும் காக்கும் பேறு சிலந்திக்கு உண்டாகியது என்றால் ஆலயப் பணியின் பெருமையை இதனால் நன்கு உணர்ந்து கொள்ளலாம். நூலால் பந்தரிட சிவபுண்ணியம் அரச பதவியைத் தருமாயின், கல்லால் ஆலயம் எழுப்பிய தருமசீலர்களுக்கு எத்துணைப் பெரிய பதவி கிடைக்கும்.?

சுதேவன் என்ற சோழ மன்னன் கமலவதி என்ற மனைவியுடன் சோழநாட்டை அரசு புரிந்தான். அவன் மகப்பேறு இன்மை குறித்து வருந்தினான். தில்லையம்பதி சென்று அம்பலவாணரை வேண்டித் தவம் புரிந்தான். சிவபெருமான் திருவருள் செய்தபடி சிலந்தி வந்து கமலவதியின் வயிற்றில் கருவடைந்தது.

கரு வளர்ந்து குழந்தை உதிக்கும் பருவம் வந்தது. சோதிட வல்லுநர் இன்னும் ஒரு நாழிகை கழித்துக் குழந்தை உதிக்குமாயின் இம்முவுலகும் ஆளக்கூடியதாக இக் குழந்தை இருக்கும் என்று கூறினார். அது கேட்ட அரச மாதேவி மகன் ஒரு நாழிகை கழித்து பிறப்பதற்கு வழி யாது என்று சிந்தித்தாள். தன் தோழிகளுடன் ஆய்ந்தாள். கால் மேலாகவும், தலை கீழாகவும் தன்னை

அமைக்குமாறு கூறினாள். அவ்வண்ணமே அவளைத் தலை கீழாகத் தூக்கிக் கட்டினார்கள். காலம் உணர்ந்தார் கூறிய நேரம் வந்தவுடன் கட்டினை நீக்கி மகவைப் பெற்றெடுத்தாள். இதனால் குழந்தை கண் சிவந்து பிறந்தது.
தாய், என் மகன் செங்கணான் என்று கூறித் தன் குழந்தையை அணைத்தாள். ஆவிபிரிந்தாள். தன் உயிர்க்கு இறுதி பயக்கும் என்று தெரிந்து, மகன் சிறப்பை முன்னிட்டு அளக்கமுடியாத வேதனையைத் தாங்கிப் பிள்ளையைப் பெற்று உயிர் துறந்தாள் என்னில், தாயன்பு எத்தனை உயர்ந்தது?.

தாயைப் பிரிந்த சேயைச் சுதேவன் இனிது வளர்த்தான். கோச்செங்கண்ணர் வேதாகமங்களையும் வில்வித்தைகளையும் கற்றுணர்ந்தார். உரியகாலத்தில் மகனுக்கு மகுடம் புனைந்து சுதேவன் கானகம் புகுந்து தவம் செய்து சிவபதம் அடைந்தான்.
கோச்செங்கட்சோழர் உலகத்தை ஒரு நெறி நிறுத்தி அரசாள்வாராயினார். அவர் முற்பிறப்பின் உணர்வு பெற்றார். சிவபெருமான் திருவருள் பெற்ற காரணத்தால் அங்கு வெண்ணாவலடியில் வாழும் செழுநீர்த் திரளாகிய சிவமூர்த்திக்கு அழகிய ஆலயம் கட்டி முடித்தார். முற்பிறப்பில் ஆனை செய்த இடரை நினைந்து ஆனை நுழையாதபடி வாயில் வைத்து அமைத்தார். ஐந்து பூதத்தலங்களில் ஒன்றாகிய இந்த க்ஷேத்திரம் கருவறைச் சிறுவாயிலுடன் அமைந்துள்ளது இன்றும் காணப்பெறும்.

மந்திரிகளை ஏவிச் சோழநாட்டில் ஆங்காங்கு சிவாலயங்கள் பல புதுக்கினார். அக்கோயில் தோறும் அமுது படைக்கும் திருவிழாக்களுக்கு நிபந்தங்களும் அமைத்தார். கோச்செங்கட்சோழர் சிவபெருமான் எழுபது கோயில்களும், திருமாலுக்கு மூன்று கோயில்களும் எழுப்பியதாகத் தெரிகிறது. கோச்செங்கட்சோழர் முடிவில் திருத்தில்லை சென்று அம்பலத்தாடும் ஆடலரசனை ஆறுகாலங்களிலும் வழிபட்டு மகிழ்ந்தார். அங்கு இறைவனைப் பூசிக்கும் அந்தணர்களுக்கும் மாளிகைகள் பல புதுக்கித் தந்தார். இவருடைய பெருமையை அடியில் வரும் அப்பர் பெருமான் தேவாரம் நன்கு விளக்குகிறது:

**சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து**
**உலந்தவன் இறந்த போதே கோச்செங்கண்ணானுமாக்**
**கலந்துநீர் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்**
**குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கை வீரட்டனாரே.**

# மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாசாலைக்கு அடிக்கல் நாட்டி நூறு ஆண்டுகளானதை முன்னிட்டு நினைவுத் தூபி திறக்கப்பட்டது










உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளார் மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்திற்கு அடிக்கல் நட்டு 24.02.2025 சனிக்கிழமையுடன் நூறு வருடங்களானதை முன்னிட்டு அந்த வரலாற்று நிகழ்வை நினைவுகூரும் வகையில் நூற்றாண்டு கால்கோள் விழாத் தூபி (24) சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அதனையொட்டி (24) சனிக்கிழமை காலை கல்லடி பாலத்திற்கு அருகாமையில் சுவாமி விவேகானந்தர் மற்றும் சுவாமி விபுலானந்தர் அடிகளர்களின் சிலைகளின் பாதங்களுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் மலர் மாலை அணிவித்து ஊர்வலம் ஆரம்பமாகியது. அவ்வூர்வலம் கல்லடி சித்திவிநாயகர் ஆலயத்தினை தரிசித்து, அதன் பின்னர் இராமகிருஷ்ண மிஷனை அடைந்து வழிபட்டு, பின் கல்லடி உப்போடை சித்திவிநாயகர் மற்றும் பேச்சியம்மன் ஆலயத்தினை அடைந்து வழிபாடுகளில் ஈடுபட்டது.தொடர்ந்து சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் சமாதிக்கு மலர் மாலை அணிவித்து பாடசாலையினை வந்தடைந்து சுவாமிகளின் சிலைகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அங்கு பாடசாலையினை ஆரம்பிக்க நிலம், நிதி உதவி செய்த வள்ளல்களின் படங்களுக்கு மாலை அணிவித்து அதன் பின்னர் பாடசாலையில் அமைக்கப்பட்ட கால்கோள் நூற்றாண்டு விழா தூபி திறக்கப்பட்டது.

# தென்மராட்சி சிவபூமி பாடசாலை வேலயுதம் வீதி சாவகச்சேரியில் புதன் கிழமை (28) திறந்துவைக்கப்பட்டது.







சிவபூமி அறக்கட்டளை தலைவர் காலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மங்கல விளக்கேற்றலுடன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் சிவபூமி பாடசாலையை நாடாவெட்டி திறந்துவைத்ததுடன் படிம கல்லையூம் திறந்து வைத்தார்.

இதேவேளை சிவபூமி அறக்கட்டளையானது கடந்த 25 ஆண்டுகளாக அறப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பிறப்பிலேயே மனவளர்ச்சி குறைந்த விசேட தேவையுடைய மாணவர்களுக்காக 2003 கோண்டாவிலிலும், 2016இல் கிளிநொச்சியிலும் எமது அறக்கட்டளையால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இந்நிலையில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனில் வசிப்பவர்களுமாகிய வைத்திய கலாநிதி கனகசபை கதிர்காமநாதன் இரட்ணேஸ்வரி தம்பதிகள் மனமுவந்து வழங்கிய இல்லத்தைப் புனரமைத்து இப்பாடசாலை ஆரம்பிக்கப்படுகிறது. பெரிய பரப்பளவு கொண்ட தென்மராட்சித் திருநகரில் மாற்றுவலுவுடைய குழந்தைகளை மகிழ்வாய் வாழ வைக்க இந்த பீடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சாவகச்சேரி பிரதேச செயலர் எப்.சி.சத்தியசோதி கௌரவ விருந்தினர் கேன் பற்றுநோய் காப்பக தலைவர் வைத்திய கலாநிதி கமலா வைத்தியநாதன் சாவகச்சேரி நகர சபை தவிசாளர் சிறிபிரகாஸ் ஆகியோர் கலந்து கொண்டார்கள் அதிதிகள் உரையை தொடர்ந்து சிவபூமி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு பக்திக் கடலில் திளைத்த சிவபூமி திருவாசக அரண்மனை!





யாழ் நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவ தட்சணாமூர்த்தி ஆலயத்தில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பூஜை வழிபாடுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்றன.

ஆயிரக்கணக்கான மக்கள் புனித நீரால் சிவலிங்க பெருமானை நீராட்டி, அங்கு 108 லிங்கங்களாக வீற்றிருந்த சிவபெருமானிடம் தங்களின் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர். ஆலயத்தில் 108 சிவலிங்க மூர்த்திகள் நந்தியம் பெருமானோடு காட்சியளித்தனர். வாசலிலே கருங்கல் தேரிலே சிவலிங்கப் பெருமானும், மாணிக்கவாசகப் பெருமானும் காட்சி அளித்தமை அடியவர்களுக்கு ஒரு அற்புதத் தரிசனமாக அமைந்தது. ஆலயச் சுவர்களில் திருவாசகம் கல்வெட்டுக்களாகப் பொறிக்கப்பட்டிருந்த சிறப்புமிக்க சூழலில், பக்தர்கள் பக்திக் கடலில் திளைத்தனர்.





# வெடுக்குநாறிமலையில் சிறப்பாக நடைபெற்ற சிவராத்திரி வழிபாடுகள்



வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில், ஒலுமடு பாலமோட்டை கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் தமிழர்களின் தொன்மையான ஆன்மிக மற்றும் வரலாற்று அடையாளமாகத் திகழ்கிறது. சுமார் 300 மீட்டர் உயரமுள்ள இந்த மலையின் உச்சியில் வீற்றுள்ள ஆதி லிங்கேஸ்வரர் திருலிங்கம், கிமு 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது வரலாற்று ஆய்வுகளின் மூலம் உறுதியாகிறது. மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள கேணியும், அங்குள்ள தமிழ் பிராமியக் கல்வெட்டுக்களும் இத்தலத்தின் தொன்மையையும், தமிழர்களின் பூர்வீக வரலாற்றுப் பெருமையையும் இன்றும் உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஐந்து தலைமுறைகளுக்கும் மேலாக இப்பிரதேச மக்கள் இந்த ஆலயத்தைத் தங்களின் குலதெய்வமாகப் போற்றி, தொடர்ச்சியான ஆன்மிக மரபைப் பேணி வருகின்றனர். எனினும், கடந்த 2018ஆம் ஆண்டு இலங்கை தொல்லியல் திணைக்களமும் வனவளத் திணைக்களமும் மக்களின் வழிபாட்டு உரிமைகளுக்குத் தடையை ஏற்படுத்தின. உள்ளூர் மக்களின் தொடர்ச்சியான மற்றும் உறுதியான போராட்டங்களுக்குப் பின்னர், தொல்லியல் திணைக்களத்தின் நிபந்தனைகளுடன் நெடுங்கேணி காவல்துறையினர் தற்காலிகமாக வழிபாடுகளை மேற்கொள்ள மட்டும் அனுமதி வழங்கினர்.



இருப்பினும், சிதைவடைந்த நிலையில் உள்ள ஆலயத்தைப் புனரமைப்பதற்கோ அல்லது அடியவர்களுக்கான புதிய கட்டடங்களை அமைப்பதற்கோ இன்னும் அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றமை பக்தர்களிடையே பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. ஒரு இனத்தின் வரலாற்றுச் சின்னமாகவும் ஆன்மிக மையமாகவும் விளங்கும் இந்த ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் உரிமையும், அதன் தொன்மையும் எவ்வித இடையூறுமின்றிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். இந்தப் புனிதமான சிவராத்திரி நன்னாளில், வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆன்மிக சுதந்திரம் நிலைநாட்டப்படவும், அதன் வரலாற்றுப் பொக்கிஷங்கள் முறையாகப் பாதுகாக்கப்படவும் பெருமளவு பக்தர்கள் வருகை தந்து வழிபாடுகளை மேற்கொண்டனர்.



# பண்ணாகம் விசவத்தனைப் பதியுறையும் சண்முகப்பெருமான் ஆலயத்திற்கு எழுந்தருளிய அற்புத வரலாறு





ஏறத்தாழ நூற்றியம்பது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் - மானிப்பாய் காரைநகர் பிரதான வீதி வழியாக புதிதாக வார்க்கப்பட்டு வாகனம் ஒன்றில் ஏற்றி கொண்டு செல்லப்பட்ட சண்முகப்பெருமான் விசவத்தனை வீதிக்கு முன்பாக வரும் போது வாகனம் நின்று விட்டதாகவும் கடும் பிரயத்தன முயற்சிகள் எடுத்தும் வாகனம் இயங்க மறுத்தது.

அன்றைய காலத்தில் வாழ்ந்த கிராமத்து பெரியவர்கள் இந்த செய்தியை அறிந்து அந்த இடத்திற்கு வந்து விலையை மதித்து இந்த சண்முகப்பெருமானை எங்கள் ஆலயத்திற்கு தருமாறு கேட்டபோது தங்கள் ஆலயத்திற்கு என்று வாகனத்தில் கொண்டு வந்தவர்களும் அதற்கு சம்மதித்து அதனை விசவத்தனை முருகன் ஆலயத்தில் சேர்ப்பித்தனர் என்பது செவி வழிக்கதையாகும்.

வயலும் வயல் சார்ந்த பிரதேசமான பண்ணாகம் விசவத்தனையே தனக்குரியது என்று விரும்பி வந்து எழுந்தருளியிருக்கிறார் எம்பெருமான். அழகும் விசாலமும் கனதியும் புன்சிரிப்பும் நிறைந்தவரான எம்பெருமான் சண்முகப்பெருமான் (ஆறுமுகன்) விசவத்தனைப்பதியில் வீற்றிருந்து தன்னை நாடிவருவோர்க்கு வேண்டிய வரம் யாவும் அருளுகிறார்.

ஆக்கம் - மு.பாபுஜி பண்ணாகம்

# தருமையாதீனத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தில் திருமுறை வகுப்புக்களின் ஆரம்பமாகின்றன




மகாசிவராத்திரி புண்ணிய தினமான 15-02-2026 அன்று, தருமையாதீனத்தின் திருமுறை வகுப்புகளின் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான தொடக்க விழா, தருமை குருமணிகளின் ஆசியுடன் நாவற்குழி திருவாசக அரண்மனையின் திருவாசக அரங்கத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தியாக. மயூரகிரிக்குருக்கள் கலந்துகொண்டு, நால்வர் திருவுருவச்சிலைகளுக்கு தீபாராதனை செய்து ஆசியுரை வழங்கியதுடன், நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்திலும் இப்பண்ணிசை வகுப்புகளை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தந்துள்ளார். ஈழத்தின் தவப்புதல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கியதுடன், தமது நிலையங்கள் அனைத்திலும் பண்ணிசை வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கிப் பெருமை சேர்த்துள்ளார்.



மேலும், முனைவர் கிருபாசக்தி கருணா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன் மற்றும் சைவப்புலவர் கலாநிதி ஏரம்பமூர்த்தி அனுசாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பு வாழ்த்துரைகளை வழங்கினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு நிலையங்களின் பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்த இந்நாள், திருமுறை வளர்ச்சிப் பாதையில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது.





# கலை நிகழ்வுகளால் நிறைந்த நாவற்குழி சிவபூமி திருவாசக அரங்கம்



நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை அரங்கில், மகா சிவராத்திரி புண்ணிய தினத்தை முன்னிட்டு கடந்த 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் மறுநாள் அதிகாலை வரை பக்திபூர்வமான கலை, கலாசார நிகழ்வுகளுடன் கூடிய பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சாவகச்சேரிப் பிரதேச செயலகம், கைதடி சைவ ஐக்கிய சங்கம் மற்றும் சிவபூமி திருவாசக அரண்மனை ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த இவ்விழாவானது, ஞாயிறு மாலை 6.00 மணிக்குத் தொடங்கி திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணி வரை இடைவிடாது இடம்பெற்றது.

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் செயலாளர் திரு. துளசிராம் தனபாலசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்துகொண்டு விசேட அருளுரையினை வழங்கினார். அவர் தனது உரையில் சிவராத்திரி



விரதத்தின் மகத்துவம் குறித்தும், திருமுறைகள் ஊடாகப் பக்தியை வளர்ப்பதன் அவசியம் குறித்தும் விளக்கமளித்தார்.



இவ்விழாவிற்குச் சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் திரு.கு.ஊ.சத்தியசோதி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். இரவு முழுவதும் நடைபெற்ற நான்கு கால பூசைகளுடன் இணைந்து, பண்ணிசைப் பாடல்கள், சமயச் சொற்பொழிவுகள் மற்றும் பல்வேறு கலை நிகழ்வுகளும் பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்தின. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்த பெருமளவிலான சிவனடியார்கள், திருவாசக அரண்மனையில் சிவசிந்தனையுடன் விழிப்பிருந்து இறைவனை வழிபட்டனர். சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வகையில் அமைந்த இம் மகா சிவராத்திரி விரதம், ஆன்மீக உணர்வோடு சீரும் சிறப்புமாக நிறைவு பெற்றது.

# ஆத்மா சாந்திப் பிரார்த்தனை


இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை மற்றும் இணுவில் மேற்கு செட்டிவளவு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. குமாரலிங்கம் ஸ்ரீதர் (உசன்) அவர்கள் கடந்த 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி அனைவரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. சிறந்த மனிதநேயப் பண்பாளராகவும், அனைவரிடமும் அன்புடன் பழகும் உயர்ந்த குணம் கொண்டவராகவும் விளங்கிய இவரது மறைவு இணுவில் மண்ணிற்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.



அன்னாரின் பிரிவு அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மறைந்த அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருவடி நிழலில் சாந்தியடையவும் பிரார்த்திக்கிறோம். இந்தத் துயரமான வேளையில் அவரை இழந்து வாடும் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, இப்பிரிவைத் தாங்கும் மனவலிமையை இறைவன் அவர்களுக்கு வழங்க வேண்டும் என வேண்டுகிறோம்.

# வெகுவிமரிசையாக நடைபெற்று வரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் மற்றுமொரு மைல்கல்லாக அதன் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மிக விமரிசையாக நடைபெறுகிறது. கல்விப் பயணத்தின் இலக்கை எட்டிய ஆயிரக்கணக்கான மாணவர்களின் கனவுகள் நனவாகும் உன்னத தருணமாக இந்த விழா அமைகிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பட்டமளிப்பு விழாவானது தொடர்ந்து நான்கு நாட்களாக மிகவும் திட்டமிடப்பட்ட முறையில் நடத்தப்படுகிறது. பெருமளவிலான பட்டதாரிகள் பங்கேற்பதால், விழா நிகழ்வுகள் அனைத்தும் மொத்தம் 12 அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டு சீரிய முறையில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு அமர்விலும் கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம் எனப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் மிகுந்த பெருமிதத்துடன் தமது பட்டங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இம்முறை நடைபெற்று வரும் பட்டமளிப்பு விழாவில் உள்வாரி மற்றும் வெளிவாரி மாணவர்கள் என மொத்தம் 3,252 பேர் பட்டங்களைப் பெறுகின்றனர். இதில் இளமாணிப் பட்டதாரிகள் மட்டுமன்றி, உயர்கல்வியைத் தொடர்ந்த கலாநிதி மற்றும் முதுதத்துவமாணி பட்டதாரிகளும் உள்ளடங்குகின்றனர்.




பல்கலைக்கழக வேந்தர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பேராசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்னிலையில் மாணவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பயணத்தில் இந்த 40ஆவது பட்டமளிப்பு விழா ஒரு முக்கிய நிகழ்வாகத் திகழ்கிறது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தடையின்றி கல்வியைத் தொடர்ந்த மாணவர்களின் விடாமுயற்சிக்கு இந்த விழா ஒரு சான்றாக அமைகிறது. பட்டங்களைப் பெற்றுக்கொள்ளும் 3,252 பட்டதாரிகளும் சமூகத்தின் பல்வேறு துறைகளில் தடம் பதிக்கும் நோக்குடன் தத்தமது கல்வி நிறுவனத்திலிருந்து புதிய நம்பிக்கையோடு வெளியேறுகின்றனர்.






# சிவபூமி மலையக ஆச்சிரமத்தில் அபயம் அறக்கட்டளை ஏற்பாட்டில் புதிய திட்டங்கள் அறிமுகம்











அபயம் அறக்கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில் மலையகத்தில் உள்ள கலஹா சிவபூமி ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற மாணவர்களுக்கான இலவச வகுப்புக்களில் புதிய வகுப்பறை திறப்பு விழாவும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட திறன் பலகை (ஸ்மார்ட் போட்) கையளிக்கும் வைபவமும் மற்றும் பெற்றோர் மாணவர் சந்திப்பும் 21.02.2026 ஆம் திகதி காலை கலஹா சிவபூமி ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

பெருமளவு மாணவர்களும் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்ட நிகழ்வினை இலண்டனில் இருந்து வருகை தந்திருந்த வைத்திய நிபுணரும் அபயம் அறக்கட்டளை ஸ்தாபகருமான பார்த்தீபன் அவர்கள் தலைமையேற்று நிகழ்த்தினார். இதன்போது வறுமையில் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பல அரிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இந்தக் கிராமத்தில் அபயம் அமைப்பினரால் சிவபூமி ஆச்சிரமத்தில் நிகழ்த்தப்படுகின்ற இலவச கல்வி மற்றும் வைத்திய சேவைகளின் நன்மைகளை பெற்றோர்கள் பெருமையாக நன்றியுடன் நினைவு கூர்ந்தனர்.



மேலும் இந்த கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றி பெற்றோருடனும் ஆசிரியர்களுடனும் கலந்துரையாடப்பட்டது. அதன் ஒரு அங்கமாக பேராதனை பல்கலைக்கழக மாணவர்களையும் இந்த கல்விச் சேவையின் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டனர். 200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட நிகழ்வின் முடிவில் கலந்து கொண்ட யாவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.அபயம் அறக்கட்டளை அமைப்பின் ஏற்பாட்டில் மலையகத்தில் உள்ள கலஹா சிவபூமி ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற மாணவர்களுக்கான இலவச வகுப்புக்களில் புதிய வகுப்பறை திறப்பு விழாவும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட திறன் பலகை (ஸ்மார்ட் போட்) கையளிக்கும் வைபவமும் மற்றும் பெற்றோர் மாணவர் சந்திப்பும் 21.02.2026 ஆம் திகதி காலை கலஹா சிவபூமி ஆச்சிரமத்தில் நடைபெற்றது.



பெருமளவு மாணவர்களும் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்ட நிகழ்வினை இலண்டனில் இருந்து வருகை தந்திருந்த வைத்திய நிபுணரும் அபயம் அறக்கட்டளை ஸ்தாபகருமான பார்த்தீபன் அவர்கள் தலைமையேற்று நிகழ்த்தினார். இதன்போது வறுமையில் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பல அரிய கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இந்தக் கிராமத்தில் அபயம் அமைப்பினரால் சிவபூமி ஆச்சிரமத்தில் நிகழ்த்தப்படுகின்ற இலவச கல்வி மற்றும் வைத்திய சேவைகளின் நன்மைகளை பெற்றோர்கள் பெருமையாக நன்றியுடன் நினைவு கூர்ந்தனர்.

மேலும் இந்த கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றி பெற்றோருடனும் ஆசிரியர்களுடனும் கலந்துரையாடப்பட்டது. அதன் ஒரு அங்கமாக பேராதனை பல்கலைக்கழக மாணவர்களையும் இந்த கல்விச் சேவையின் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டனர். 200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட நிகழ்வின் முடிவில் கலந்து கொண்ட யாவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# எட்டு தங்கப் பதக்கங்களை மருத்துவத்துறையில் வென்ற சாதனை இளம் மருத்துவர் செல்வி அபிராமி நாகரட்ணம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட வரலாற்றில் ஒரு பொற்கால நிகழ்வாக, 2026 பெப்ரவரி 19 அன்று நடைபெற்ற 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா அமைந்தது. இந்நாளில், மருத்துவத்துறையில் கால்பதிக்கும் இளம் மருத்துவர் செல்வி அபிராமி நாகரட்ணம் நிகழ்த்திய சாதனை, ஒட்டுமொத்தத் தமிழ் பேசும் சமூகத்திற்கும் பெருமிதத்தைத் தேடித்தந்துள்ளதோடு, பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு அழியாத முத்திரையாகவும் மாறியுள்ளது.

மருத்துவப் படிப்பு என்பது மிகுந்த அர்ப்பணிப்பும், இரவு பகலாகத் தொடரும் கடின உழைப்பும் தேவையானது. அத்தகைய சவாலான துறையில், தனது மருத்துவப் படிப்பின் அனைத்துக் கட்டங்களிலும் முதலிடம் பெற்று, ஒரே மேடையில் 8 தங்கப்பதக்கங்களைச் சுவீகரிப்பது என்பது சாதாரணமான ஒன்றல்ல. அபிராமியின் இந்த சாதனை, அவரது அசாத்தியமான அறிவுத்திறனுக்கும், தளராத விடாமுயற்சிக்கும் கிடைத்த மகுடமாகும். அவர் சத்திரசிகிச்சை, மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல், மற்றும் குழந்தை மருத்துவம் போன்ற மிக முக்கியமான மற்றும் சவாலான பிரிவுகளில் தனது விசேட சித்தியை நிலைநாட்டியுள்ளார். இவை அனைத்திற்கும் மேலாக, மருத்துவப் பீடத்தின் சிறந்த மாணவிக்கான விருதினையும் தட்டிச் சென்றதன் மூலம், அவர் ஒரு முழுமையான ஆளுமையாகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

அபிராமியின் இந்த வெற்றி, தனிநபர் சாதனை என்பதற்கும் அப்பால் ஒரு சமூக மாற்றத்தின் குறியீடாக அமைகிறது. குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் பெண் கல்வியானது எவ்வளவு வலுவாக வேரூன்றியுள்ளது என்பதையும், தொழில்சார் உயர்கல்வித் துறைகளில் பெண்கள் எத்தகைய உன்னத நிலையை அடைய முடியும் என்பதையும் இது பறைசாற்றுகிறது. கிராமப்புறங்களில்

இருந்து மருத்துவக் கனவுகளுடன் வரும் ஆயிரக்கணக்கான மாணவிகளுக்கு அபிராமி ஒரு பெரும் உந்துசக்தியாகத் திகழ்கிறார். கல்வியால் ஒரு சமூகம் எவ்வளவு உயரத்திற்குச் செல்ல முடியும் என்பதற்கு அவரது வெற்றி ஒரு வாழும் உதாரணமாகும்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீட வரலாற்றில் ஒரே நேரத்தில் அதிக பதக்கங்களை வென்ற மாணவர்களில் ஒருவராக இவர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. திறமைமிக்க இவ்வாறான இளம் மருத்துவர்கள் எமது தேசத்தின் சுகாதாரக் கட்டமைப்பில் இணையும்போது, பொதுமக்களுக்கான மருத்துவச் சேவை தரம் மிக்கதாகவும், நவீனத்துவமானதாகவும் மாறும் என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாண மண்ணின் மைந்தர்களாக உருவாகும் இத்தகைய ஆளுமைகள், எமது தேசத்தின் சுகாதாரத் துறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வார்கள் என்பது திண்ணம். விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பின் அடையாளமாகத் திகழும் செல்வி அபிராமி நாகரட்ணத்தின் எதிர்கால மருத்துவப் பயணம் சிறக்க மனமார்ந்த வாழ்த்துகள்.

# சிவராத்திரி விரத நாளில் பெருமளவு பக்தர்கள் திரண்ட மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை!



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றிச்சரர் ஆலயத்திற்கு அருகில் உள்ள சிவபூமி திருமந்திர அரண்மனையில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பூஜை வழிபாடுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் புனித நீரால் சிவலிங்க பெருமானை நீராட்டி, அங்கு 108 லிங்கங்களாக வீற்றிருந்த சிவபெருமானிடம் தங்களின் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர். ஆலயத்தில் 108 சிவலிங்க மூர்த்திகள் நந்தியம் பெருமானோடு காட்சியளித்தனர்.

ஆலயச் சுவர்களில் மூவாயிரம் திருமந்திரப் பாடல்கள் கல்வெட்டுக்களாக கருங்கல்லில் பொறிக்கப்பட்டிருந்த சிறப்புமிக்க சூழலில், பக்தர்கள் பக்திக் கடலில் திளைத்தனர்.







இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(தை-2026) ISBN-978-955-7420-00-4